செய்தி வெளியீடு எண்: 1098 நாள்: 14.12.2010

**<u>இந்திய கடற்படையில் பல்வேறு பணிகளுக்கு தற்போது நடைபெறவிருக்கும் ஆட்சேர்ப்பு பணி விபரம் தொடர்பான செய்தி.</u>**

**(1) இந்திய கடற்படையில் முதுநிலையில் உள்ள இரண்டாம் நிலை பணிகளுக்கான கல்வித் தகுதியாக 10 + 2ல் கணிதம் மற்றும் பௌதீகத்தை பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மேலும் வேதியியல், பயாலஜி மற்றும் கணினி அறிவியல் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடம் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வயது: விண்ணப்பதாரர் 01 ஆகஸ்ட் 1990க்கும் க்கும் 31 ஜுலை 1994 க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். <u>இப்பணிக்கு விண்ணப்பிக்க கடைசி நாள். 2010 டிசம்பர் 25 ஆகும்.</u>**

**(2) இந்திய கடற்படையில் ஆர்ட்டிபைஸர் அப்ரண்டீஸ் (Artificer Apprentice) இப்பணிக்கு கல்வித் தகுதியாக 10 + 2ல் கணிதம் மற்றும் பௌதீகத்தை பாடமாகக் கொண்டு 55 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மேலும் வேதியியல், உயிரியல் மற்றும் கணினி அறிவியல் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வயது: விண்ணப்பதாரர் 01 ஆகஸ்ட் 1991 க்கும் 31 ஜுலை 1994 க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.**

**(3) இந்திய கடற்படையில் மெட்ரிக் ரெக்ரூட் (Matric Recruit) பணிக்கு மெட்ரிக் (10ஆம் வகுப்பு தேர்ச்சி) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது: விண்ணப்பதாரர் 01 அக்டோபர் 1990 க்கும் 30 செப்டம்பர் 1994 க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.**

**(4) இந்திய கடற்படையில், மெட்ரிக் வரை பயிலாதோர் (Non Matric Recruit)க்கான பணியிடங்களுக்கு 6 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது: விண்ணப்பதாரர் 01 அக்டோபர் 1990 க்கும் 30 செப்டம்பர் 1994 க்கும் இடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.**

**<u>வரிசை எண். (2) , (3) மற்றும் (4) ஆகிய இப்பணிகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள். 2011 ஜனவரி 15 ஆகும்.</u>**

**இது தொடர்பான விரிவான விளம்பரம் 2010 நவம்பர் 27 மற்றும் 2010 டிசம்பர் 25ம் தேதிகளில் எம்ப்ளாய்மென்ட் நியூஸ் பேப்பர் மற்றும் முன்னோடி தேசிய மற்றும் உள்ளூர் நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.**

**மேற்கண்ட பணிகளுக்கான தேர்வு 2011ம் ஆண்டு மார்ச்/ஏப்ரல் மாதங்களில் சென்னை, கோயம்புத்தூர், அரக்கோணம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெறும்.**

**இந்திய கடற்படையில் ஆட்கள் சேர்வதற்குரிய முறையான விண்ணப்பங்கள் மற்றும் இதர விபரங்களை கீழ்க்காணும் வெப்சைட்டில் தெரிந்து கொள்ளலாம் :**

**" www.nausena-bharti.nicin "**

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ—9.